# கதவை அறைந்து மூடுபவர்கள் (15:1-31)

நான் சென்று சேர வேண்டிய இடத்தைப் பற்றி நினைத்துக் கொண்டு காரை ஓட்டிச் சென்று கொண்டிருக்கையில் எனது கவனம் வேறு எதன்மீதும் படியாது இருந்த வேளையில் எனது கார் எதன் மீதோ மோதி - டொம்-எனது தலை காரின் கூரையின் மீது மோதும்படி நான் இருக்கையிலிருந்து எழும்பிக் குதிக்கும்படியாயிற்று. எனது நினைவு ஒருமுகப்பட்டபோது, நான் ஒரு பள்ளிக்கூடத்தின் முன்பாக இருந்ததையும், பள்ளிக்கூட அதிகாரிகள் மாணவர்களின் பாதுகாப்பிற்காக அந்தத் தெருவில் வேகத் தடையைக் கட்டியிருந்ததையும் உணர்ந்தேன். வேகத் தடையின்மேல் முட்டியபோது நான் பெற்ற அதே உணர்வை அப். நடபடிகள் புத்தகத்தை வாசித்து, அதிகாரம் 15 க்கு வருகையில் நான் பெறுகின்றேன். பவுல் தமது சுவிசேஷப் பயணங்களுக்குத் தயாராகிக் கொண்டிருந்தார்; எனது சிந்தையைப் பொறுத்தமட்டில் அவர் புதிய அந்நிய இடங்களின் எல்லை வரைக்கும் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்வதற்காகச் சென்றார். இதற்கு மாறாக - டொம் - எனக்கு எந்த விதத்திலும் சம்பந்தப்படாத தகராறு, ஒரு சபையின் அமளியைப் பற்றிச் சொல்வதற்கு, லூக்கா எல்லாவற்றையும் கிரீச்சிட்டு நிறுத்துகிறார் (நான் இப்படி நினைத்தேன்).

ஆண்டுகள் பல கடந்தன, அப். நடபடிகள் 15 ஐப் பற்றிய எனது மதிப்பீடானது மறுபடியும் சரி பார்க்கப்பட்டது, இந்த அதிகாரத்தின் முதல் பகுதியில் நடந்த நிகழ்ச்சிகள் மிகவும் முக்கியமானவையாகும் - இதற்கு லூக்கா ஒதுக்கியுள்ள இட அளவே ஆதாரம் ஆகும். அந்த ‘‘அமளி’’ மட்டும் ஆய்வு செய்யப்பட்டு அமர்த்தப்படாதிருந்தால், அதன் பின் நற்செய்திப் பயணங்களே இருந்திருக்காது! இந்த விஷயமானது எனது காரியங்கள் எல்லாவற்றிலும் சம்பந்தப்பட்டது - எனது இரட்சிப்பிலும் - தொடர்புடையது என்று நான் இப்பொழுது

உணருகின்றேன். எனது வாழ்க்கையில் நான், சபையைக் கலக்குகின்ற "பிரச்சனைகள்" அநேகம் கண்டுள்ளேன், ஆனால் அப். நடபடிகள் 15ன் பிரச்சனைக்கு முன்னால் இவை யாவும் முக்கியத்துவம் குறைந்தவைகளாகி விடுகின்றன.

அதிகாரம் 14ன் கடைசியில் பவுலும் பர்னபாவும் தங்களின் முதலாம் நற்செய்திப் பயணத்தை முடித்துக் கொண்டு மிகுந்த சந்தோஷ உணர்வுடன் திரும்பி வந்தார்கள். அவர்கள், கர்த்தர் "புறஜாதிகளுக்கு விசுவாசத்தின் கதவைத் திறந்ததை" மிகுந்த ஆர்வத்துடன் அறிவித்தார்கள் (14:27) - பிசீதியாவின் அந்தியோகியா, இக்கோனியா, லீஸ்திரா மற்றும் தெர்பை ஆகிய பட்டணங்களில் புறஜாதியாரின் சபைகள் (சில யூதர்களும் நம்பினார்கள் (அப். 14:1), ஆனால் இந்த சபையில் புறஜாதியாரே பெரும்பான்மையினராய் இருந்திருக்க வேண்டும்). நிலைநாட்டப் பட்டதையும் (14:20, 21, 23) புறஜாதியாரில் அநேகர் கிறிஸ்தவர்களானது பற்றியும் அவர்கள் அறிவித்தார்கள் (14:21)! தூர இடங்களில் இருந்த புறஜாதியார் ஏற்றுக் கொள்ளும் மனமுடையவர்களாயிருந்தார்கள் என்பதைப் பவுலும் பர்னபாவும் காண்பித்திருந்தார்கள்! ஒரு இழந்து போன உலகம் காத்திருந்தது; ஏராளமான ஆத்துமாக்களின் அறுவடை நிச்சயம்! ஒவ்வொரு கிறிஸ்தவனும் நிச்சயமாக சந்தோஷப்படுவான். கர்த்தர் "புறஜாதிகளுக்கு விசுவாசத்தின் கதவைத் திறந்தார்'' என்பது பற்றி துரதிர்ஷ்டவசமாக எல்லாரும் சந்தோஷமடைந்து விடவில்லை. அந்தியோகியாவுக்கு வந்த மனிதர்கள் அந்தக் கதவை அறைந்து மூடுவதென்று விரைவிலேயே தீர்மானம் செய்தார்கள். இந்தப் பாடத்தில் நாம் அப். நடபடிகள் 15ல் கதவை அறைந்து மூடியவர்களையும்- இன்றைய நாட்களில் கதவை அறைந்து மூடுபவர்களையும் பற்றி வெளிப்படுத்த விரும்புகின்றோம்.

நமது வேதவசனப் பகுதிக்கு நாம் செல்வதற்கு முன்பு, இம்முரண்பாடு பற்றிய இன்னொரு விபரமானது கலாத்தியருக்கு எழுதின நிருபத்தில் நாம் பெற வாய்ப்புள்ளது என்பதை நான் குறிப்பிடுவது அவசியம். கலாத்தியர் 2:1-10 பகுதிகளில் உள்ள அதே நிகழ்ச்சிகளைப் பற்றியே அப். 15:1-35ல் கூறுவதாக பழைமைவாதக் கல்வியாளர்கள் பாரம்பரியக் கண்ணோட்டம் கொண்டிருக்கின்றார்கள். F.W. Farrar என்ற எழுத்தாளர் விளக்கப்படுத்துவது போல,

“இவ்விரண்டு விபரக் குறிப்புகளிலும், ஒரே விதமான மக்கள், ஒரே விதமான நேரத்தில், ஒரே விதமான இடத்தில் இருந்து, ஒரே விதமான கருத்துக்குச் சென்று, ஒரே விதமான கலகக் காரர்களால் ஒரே விதமான இடையூறு அடைந்து, ஒரே விதமான விளைவை பெறுகின்றார்கள்.’’ இவ்விரண்டு விபரங்களையும் ஒப்புரவாக்குதலில் சில இடர்ப்பாடுகள் உள்ளன,[1] ஆனால் கலாத்தியர் 2ன் நிகழ்ச்சிகளைப் பவுலின் வாழ்வில் எவ்விடத்தில் நிகழ்ந்தது என்ற கருத்துக் கொள்வதில் இல்லாமல் இவ்விடர்ப்பாடுகள் உள்ளன. இவ்விரு விபரக் குறிப்புகளும் ஒரே நிகழ்ச்சியைக் கூறாதிருந்தாலும், ஒரே விதமான நிகழ்ச்சியைக் கூறுவதால் அப். நடபடிகள் 15ஐப் பற்றிய நமது இந்தப் பாடத்தில் நாமே, கலாத்தியரின் சில விபரங்களையும் உள்ளடக்குவோம்.

## அன்று கதவை அறைந்து மூடியவர்கள்

### முரண்பாடு (15:1-3)

பவுலும் பர்னபாவும் தங்களின் முதலாம் நற்செய்திப் பயணத்திற்குப் பிறகு அந்தியோகியாவில் தங்கி ஊழியம் செய்த ‘‘அநேக நாட்களின்’’ போது (14:28) அவர்கள் செய்திருந்த ஊழியத்தைப் பற்றிய செய்தியானது எருசலேமை அடைந்தது என்பது தெளிவாகும் - அதனால் சில யூதர்கள் கலக்கம் அடைந்தார்கள். பத்து வருடங்களுக்கு முன்பே பேதுரு கொர்நேலியுவின் வீட்டாரை மனமாற்றியபோது புறஜாதியாருக்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்வது பற்றிய கேள்வி எருசலேமில் எழுந்திருந்தது; அந்த வேளையில் அது தீர்த்து வைக்கப்பட்டும் இருந்தது (அப். 11:1-18). சீரியாவின் அந்தியோகியாவில் புறஜாதியார் அதிகம் இருந்த உள்ளூர் சபையானது நிலை நாட்டப்பட்ட போது அவர்களுக்கு உதவி செய்ய - அதாவது அந்த ஊழியத்திற்கு ஆசீர்வாதம் பெற்றுத்தர - எருசலேம் சபையார் பர்னபாவை அனுப்பியும் வைத்தார்கள் (11:20-22).

ஆயினும், பவுல், பர்னபா ஆகியோரின் ஊழியமானது பழைய பயங்களை எழுப்பியது. யூதர்களைக் காட்டிலும் புறஜாதியார் நற்செய்தியை வெகுவாக ஏற்றுக் கொண்டார்கள் - ஒவ்வொரு யூதருக்கும் ஆயிரக்கணக்கில் என்ற விகிதத்தில்

உலகத்தில் புறஜாதியார் இருந்தார்கள். சபையானது ஏராளமான புறஜாதியாரால் - அவர்களின் தெய்வ நம்பிக்கை யற்ற கலாச்சாரங்கள், மனநிலை, பழக்கங்கள் ஆகியவற்றால் நிரம்பி வழிந்ததையும் மற்றும் யூதர்களின் மரணபயத்தின் சாத்தியக் கூறுகளையும் காண முடிந்தது![2] புறஜாதியார் முழு ஐக்கியத்திற்குள் கொண்டு வரப்படும் முன்னர் சரியான உபதேசத்தைப் பெறுவதற்கும், சரியான முறையில் பழக்கப் படுத்தப்படுவதற்கும் ஏதாவது செய்ய வேண்டும் என்று அவர்கள் (யூதர்கள்) நம்பினார்கள்.

சிலருக்குத் தீர்வு தெளிவாய் இருந்தது: புறஜாதியாருக்கு எப்பொழுதும் எது தேவையாயிருந்தது; அவர்கள் யூதர்களாக வேண்டும்! புறஜாதியாரின் கரடுமுரடான பழக்க வழக்கங் களை மோசேயின் நியாயப்பிரமாணமானது மென்மையாக்க முடியும், அதன்மூலம் மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்ட, பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்த யூத கிறிஸ்தவர்கள் புறஜாதி யாரின் பிரசன்னத்தைச் சகித்துக் கொள்ள முடியும். (கொர்நேலி யுவின் மனமாற்றத்தின்போது கலகம் செய்த சிலர், [11:2, 3] இப்போது ''விருத்தசேதனமற்ற புறஜாதியாரை ஏற்றுக் கொள்வதால் நன்மை எதுவும் விளையாது என்று அப்போதே உங்களுக்குச் சொன்னோமே. இப்பொழுது அந்த ஏற்பாட்டி னால் விளைந்த பேரழிவைப் பார்த்தீர்களா?" என்று கூறியதை என்னால் கற்பனை செய்ய முடிகின்றது!)

இந்த ''சீரழிவை'' இல்லாமல் பண்ண செயல்படத் தொடங்க வேண்டிய இடம் பவுலையும் பர்னபாவையும் அனுப்பி வைத்திருந்த, புறஜாதியாருக்கு நற்செய்தியறிவிக்கும் மையமான அந்தியோகியாவேயாகும். நாம், "சிலர் யூதேயா விலிருந்து வந்து; நீங்கள் மோசேயினுடைய முறைமையின் படியே விருத்தசேதனமடையாவிட்டால், இரட்சிக்கப்பட மாட்டீர்கள் என்று [அந்தியோகியாவிலிருந்த] சகோதரருக்குப் போதகம் பண்ணினார்கள்" (15:1) என்று வாசிக்கின்றோம்.

யார் வந்தார்கள் என்பதைக் கவனியுங்கள்: ''சிலர் யூதேயாவிலிருந்து வந்து ..." - குறிப்பாக எருசலேமிலிருந்து மனிதர்கள் வந்தார்கள் (வ. 2-4). இவர்கள் வசனம் 5ல் "பரிசேய சமயத்தாரில் விசுவாசிகளான சிலர்'' என்று அடையாளப் படுத்தப்படும் அதே மனிதர்களாயிருந்திருக்கலாம். இங்குதான் முதல்முதலாகப் பவுலைத் தவிரக் கிறிஸ்தவர்களான மற்ற

*பரிசேயர்களைப் பற்றி நமக்குக் கூறப்படுகின்றது. அவர்கள் கிறிஸ்தவர்களானது பற்றி நாம் வியப்படையலாம், ஆனால் அவர்கள் "ஒரு முக்கியமான கேள்வியின் தவறான பக்கத்தில் இருந்ததைக் காண" நாம் வியப்படைவதில்லை என்று* J.W. McGarvey *கூறினார். பரிசேயருடைய மார்க்கப் பின்னணியை நாம் மனதில் நிறுத்தும்போது, ஒவ்வொருவரும் பிரமாணத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற இயக்கத்தில் அவர்கள் தலைமையாளர்களாய் இருப்பதைக் காண்பது மிகவும் சுலபமாகும். அவர்கள் அந்தியோகியாவுக்கு வந்தபோது, அநேகமாகத் தங்களை எருசலேம் சபையின் அதிகாரப்பூர்வமான பிரதிநிதிகள் என்று உரிமை கோரியிருந்திருப்பார்கள் (வ. 24). எவ்வகையிலும், அவர்கள் எருசலேமிலிருந்து (பன்னிருவரின் ஊழியத்திற்கு அடித்தளமான இடமாக அப்பொழுதும் விளங்கிய அந்த இடத்திலிருந்து)*[3] *வந்தவர்கள் என்ற உண்மையானது அவர்களின் வார்த்தைகளுக்கு கனத்தைக் கூட்டியது.*

*அடுத்ததாக, அவர்கள் போதித்ததைக் கவனியுங்கள்: "நீங்கள் மோசேயினுடைய முறைமையின்படியே விருத்த சேதனமடையாவிட்டால், இரட்சிக்கப்படமாட்டீர்கள்." இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஆபிரகாமுடன் தேவன் செய்த உடன்படிக்கையின் முக்கிய பாகமாக விருத்தசேதன ஆசரிப்பு விளங்கிற்று (ஆதி. 17:10-14, 23-27). ஆயினும், எருசலேமிலிருந்து வந்த மனிதர்கள் விருத்த சேதனத்தை ஆபிரகாமுடன் இணைத்துப் பேசவில்லை; மாறாக அவர்கள் அந்த ஆசரிப்பை, மோசேயுடன் இணைத்துப் பேசினார்கள், இவரால் தரப்பட்ட நியாயப்பிரமாணமானது ஆபிரகாமின் காலத்துக்கு ஐநூறு வருடங்களுக்குப் பின்பு தரப்பட்டதாகும். புறஜாதியார் விருத்தசேதனத்திற்குத் தங்களை ஒப்புக் கொடுக்க வேண்டும் என்பது பற்றி மட்டும் அவர்கள் அக்கறைப்படாமல், அவர்கள் (புறஜாதியார்) யூதமார்க்கத்திற்கு மாறி, நியாயப்பிரமாணம் முழுமையும் கைக்கொள்ளும்படி செய்ய வேண்டும் என்பதே அவர்களின் நோக்கமாயிருந்தது.*[4] *வசனம் 5ல் நாம், "அப்பொழுது பரிசேய சமயத்தாரில் விசுவாசிகளான சிலர் எழுந்து, அவர்களை* [*அதாவது புறஜாதியாரை*] *விருத்தசேதனம் பண்ணுகிறதும் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படி*

அவர்களுக்குக் கற்பிக்கிறதும் அவசியம் என்றார்கள்."

புறஜாதியார் நியாயப்பிரமாணத்தைக் கற்றுக் கொள்வது நல்லது என்று இம்மனிதர்கள் கூறவில்லை; நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதன் மதிப்பைப் பற்றி அவர்கள் விவாதம் பண்ணவில்லை; மாறாக யூதராவதின் அவசியத்தைப் பற்றியே அவர்கள் போதித்தார்கள். அந்தியோகியாவிலிருந்த புறஜாதியாரிடத்தில் அவர்கள், "மோசேயின் முறைப்படி நீங்கள் விருத்தசேதனமடையாவிட்டால் இரட்சிக்கப்பட மாட்டீர்கள்"[5] என்று கூறினார்கள். விருத்தசேதனம் செய்து கொள்வதென்பது விருப்பத்தேர்வாயிருந்தால், புறஜாதியாரில் சிலர் மட்டுமே விருத்தசேதனம் பெற்றுக் கொள்வார்கள் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். ஆகையால் இரட்சிப் படைவதற்கு விருத்தசேதனம் இன்றியமையாதது என்று அவர்கள் போதித்தார்கள்!

அவர்களின் போதனை எப்படிப்பட்டது என்பதைப் பவுலும் பர்னபாவும் கண்டார்கள்: அது புறஜாதியாரின் மத்தியில் அவர்கள் செய்திருந்த ஊழியத்தை நேரடியாகத் தாக்குவதாயிருந்தது - குறிப்பாக, புறஜாதியார் யூதமார்க்கத் தமைந்தவர்களாகும்படி கூறாமல், கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தின் அடிப்படையிலேயே புறஜாதியாரை ஏற்றுக் கொள்ளும் வழக்கத்தைப் பின்பற்றினார்கள். அந்த நிலைப்பாடு (பரிசேயரின் நிலைப்பாடு) தவறானதென்று இரண்டு ஊழியக்காரர்களும் அறிந்தார்கள். அந்த உபதேசத் தின் தொலை தூர விளைவுகளையும் அவர்கள் அறிந்தார்கள். இந்த உபதேசம் ஏற்றுக்கொள்ளப்பட்டால், கிறிஸ்தவம் என்பது யூதமதத்தின் "திருத்தப்பட்ட மறு வடிவம்" என்பதைத் தவிர வேறு எவ்வகையிலும் மேலானதாக முடியாது. எருசலே மிலிருந்து வந்தவர்கள் நியாயப்பிரமாணத்தின் கதவைத் திறக்கையில், புறஜாதியாருக்குத் திறக்கப்பட்டிருந்த விசுவாசத் தின் கதவை அறைந்து மூடினார்கள், மற்றும் "நீங்கள் கிறிஸ்த வராக விரும்பினால், இந்தக் கதவின் வழியாக நீங்கள் வந்து, முதலில் யூதராக வேண்டும்" என்றும் கூறினார்கள். தொற்று நோய் போன்ற இந்த எண்ணமானது தாங்கள் நிலைநாட்டி யிருந்த சபைகள் எல்லாவற்றிலும் பரவி விட முடியும் என்பதைப் பவுலும் பர்னபாவும் அறிந்தார்கள். இது நிறுத்தப் பட வேண்டிய ஒரு மார்க்கபேதமாயிருந்தது. ஆகையால், நாம்

"அவர்களுக்கும் பவுல் பர்னபா என்பவர்களுக்கும் மிகுந்த வாக்குவாதமும் தர்க்கமும் உண்டானது" (வ. 2அ; கலா. 2:5, 13 ஐக் காணவும்) என்று வாசிக்கின்றோம்.

கலாத்தியர் 2:1-10ன் நிகழ்ச்சியானது, இதே சம்பவத்தைக் கூறுமென்றால், அந்தியோகியாவுக்கு வந்தவர்களைப் பற்றி, "கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு உண்டான சுயாதீனத்தை உளவு பார்த்து நம்மை நியாயப்பிரமாணத்திற்கு அடிமைகளாக்கும் பொருட்டாகப் பக்க வழியாய் நுழைந்த கள்ளச் சகோதரர்கள்" என்று பவுல் விளக்கப்படுத்தியிருந்தார் (கலா. 2:4). "சுயாதீனம்" மற்றும் "அடிமைத்தனம்" என்ற வார்த்தைகளுக்கிடையில் உள்ள முரண்பாட்டைக் கவனியுங்கள்: "கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு உண்டான சுயாதீனம்", "நம்மை நியாயப்பிரமாணத்திற்கு அடிமைகளாக்கும் பொருட்டாக." பவுலும் பர்னபாவும் புறஜாதியாருக்கு சுயாதீனத்தைக் கொண்டு வந்தார்கள்; யூதமார்க்கப் போதகர்களோ (அல்லது பெரும்பாலும் அழைக்கப்படும் முறைமையின்படி, யூத போதகர்களோ) அவர்களை (புறஜாதியாரை) மறுபடியும் நியாயப்பிரமாணத்தின் அடிமைத்தனத்துக்கு இட்டுச் செல்ல விரும்பினார்கள்.

கள்ள போதகர்களை எதிர்த்து நின்ற விஷயத்தில், பவுல் ஏவப்பட்ட ஒரு அப்போஸ்தலராகவே பேசினார்; அதுதான் விஷயத்தை முடிவுக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும். ஆயினும் ஆதியில் இருந்த பன்னிருவரில் ஒருவராகப் பவுல் இல்லாதிருந்ததால், அவரது உபதேசமானது மற்ற அப்போஸ்தலர்களின் உபதேசத்தைப் போல அதிகாரமுடையதென்று சில கிறிஸ்தவர்கள் நம்பவில்லை (2 கொரி. 10:13க் காணவும்). தீர்க்கதரிசிக்குச் சொந்த ஊரில் மதிப்பில்லை (யோவா. 4:44) என்ற நோய்க் குறியினாலும் பவுல் பாதிக்கப்பட்டிருக்க வாய்ப்புண்டு. அவர்களின் எண்ணம் எதுவாயிருந்தாலும், அந்தியோகியாவில் இருந்த சகோதரர்கள், "பவுலும் பர்னபாவும் அவர்களைச் சேர்ந்த வேறு சிலரும் எருசலேமிலிருக்கிற அப்போஸ்தலரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் போகவேண்டுமென்று தீர்மானித்தார்கள்" (அப். 15:2ஆ). "வேறு சிலரும்" என்பவர்களில் தீத்து என்ற பெயருள்ள இளம் வாலிபர் ஒருவரும் அநேகமாய் இருந்திருப்பார் (கலா. 2:3).[6]

**ஆலோசனைக் கூட்டம் (15:4-21)**

*அவர்கள் எருசலேமுக்கு வந்தபோது, "சபையாராலும், அப்போஸ்தலராலும், மூப்பராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட போது, தேவன் தங்களைக்கொண்டு செய்தவைகளை யெல்லாம் அறிவித்தார்கள்" (15:4). இதற்கு முன்னதாக, பவுலும் பர்னபாவும், அந்தியோகியாவின் சபையாருக்கு, "தேவன் தங்களைக்கொண்டு செய்திருந்தவைகளை ..." (14:27) அறிவித்து தேவனை மகிமைப்படுத்தியிருந்தார்கள். இம்முறை தேவனை மகிமைப்படுத்துவதற்காக மட்டுமல்ல, தேவன் புறஜாதிகளுக்கான தங்களுடைய ஊழியத்தை அங்கீகரித்தார் என்பதைக் காண்பிக்கவும் அவர்கள், "தேவன் தங்களைக் கொண்டு செய்தவைகளையெல்லாம் அறிவித்தார்கள்."*

*மிக விரைவிலேயே, "பரிசேய சமயத்தாரில் விசுவாசிகளான சிலர் எழுந்து அவர்களை [புறஜாதியாரை] விருத்தசேதனம் பண்ணுகிறதும் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக் கொள்ளும்படி அவர்களுக்குக் கற்பிக்கிறதும் அவசியம் என்றார்கள்" (வ. 5). கலாத்தியர் 2ம் அதிகாரமும் இதே பயணத்தைக் குறிப்பிடுகிறதென்றால், அவர்கள் புறஜாதி கிறிஸ்தவரான தீத்துவையும் கூட விருத்தசேதனம் பண்ணிக் கொள்ளும்படி - அநேகமாக, தங்களின் கூட்டத்தில் அவர் அமர்வதற்கு அனுமதிக்கப்படுவதற்கு அதை ஒரு தகுதியாம் சமாக்கும்படி முயற்சி செய்து - வற்புறுத்தினார்கள், ஆனால் பவுல் அதைக் கேட்பவராயில்லை (கலா. 2:3, 5).*

*விஷயங்கள் தெளிவாயிருந்தன; வரையறைக் கோடுகள் வரையப்பட்டிருந்தன. தொடர்ந்து நடைபெற்ற கூட்டங் களின் தொடர் பற்றி நமது அடுத்த பாடத்தில் விபரமாக விவாதிக்கப்படும். இந்தக் கட்டுரையின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, அங்கு தரப்பட்ட ஒரு உரையின் மேல் நான் கவனம் செலுத்த விரும்புகின்றேன். அப். 15:6 வசன மானது, "அப்போஸ்தலரும் மூப்பரும் இந்தக் காரியத்தைக் குறித்து ஆலோசனை பண்ணும்படி கூடினார்கள்" என்று கூறுகின்றது. இது "சபையாரெல்லாரும்" கூடியிருந்த (வ. 22) ஒரு பொதுக் கூட்டமாக இருந்தது. "மிகுந்த தர்க்கம் உண்டான போது, பேதுரு எழுந்து" (வ. 7அ). ஒரு பாலஸ்தீனிய யூதராக வளர்க்கப்பட்டிருந்த பேதுரு, தங்கள் நிலை குறித்து இரக்கம் கொள்வார் என்று யூதமத போதகர்கள் எதிர்பார்த்திருந்*

திருக்கலாம். பேதுரு, பவுல் மற்றும் பர்னபா ஆகியோருக்கு ஆதரவாகப் பேசியதைக் கேட்டு அவர்கள் வியப்படைந்திருக்க வேண்டும். பேதுருவின் உரையானது (வ. 7-11) கொர்நேலியு மற்றும் அவரது வீட்டாருடனான அனுபவத்தைச் (அப். 10; 11:1-18) சுற்றிச் சுழன்றது. முதலாவதாக பேதுரு, தேவன் இரட்சிப்பின் கதவைப் புறஜாதியாருக்கும் திறக்கும்படி தன்னிடம் தெரிவித்ததைக் கூறினார், மற்றும் புறஜாதியார் அக்கதவின் வழியே நுழைவதற்கு விருத்தசேதனத்தை அல்லது நியாயப்பிரமாணத்தை கைக்கொள்வதை ஒரு அவசியமான கட்டளையாக தேவன் ஏற்படுத்தவில்லை என்றும் கூறினார். பேதுருவின் விவாதங்கள் வல்லமையுள்ளவைகளாய் இருந்தன:

(1) “இருதயங்களை அறிந்திருக்கிற தேவன் … பரிசுத்த ஆவியை … அவர்களுக்கும் தந்தருளி அவர்களைக் குறித்து சாட்சி கொடுத்தார்’’ (வ. 8; அப். நட. 2 பாகத்தில் அப். 10:44-48 க்கான விளக்கவுரை மற்றும் அப். 11:15-18 க்கான குறிப்புகளைக் காணவும்). இருதயங்களை அறிகிறவர் என்று அப். நடபடிகளில் தேவன் அழைக்கப்படுவது இது இரண்டாவது முறையாகும் (1:24 ஐக் காணவும்). தேவன் வெளித்தோற்றத்தைப் பார்ப்பதில்லை, ஆனால் இருதயத்தைப் பார்க்கின்றார் (1 சாமு. 16:7). யூதமதத்தார், விருத்தசேதனமற்ற புறஜாதியாரின் வெளிப்படையான பண்புகளைப் பார்த்து, அவர்கள் இராஜ்யத்திற்குத் தகுதியற்றவர்கள் என்று அறிவித் தார்கள்; ஆனால் தேவனோ அவர்களின் இருதயங்களைப் பார்த்து அவர்கள் (யூதர்களைக் காட்டிலும்) தகுதியானவர் களே என்று அறிவித்தார்!

(2) தேவன் யூதர்கள் மற்றும் புறஜாதியார் இடையில் எவ்வித “வேறுபாட்டையும் ஏற்படுத்தவில்லை”, “விசுவாசத் தினாலே அவர்கள் இருதயங்களை அவர் சுத்தமாக்கி” (வ. 15:9) - யூத கிறிஸ்தவர்களின் இருதயங்கள் சுத்தமாக்கப்பட்டிருந்தது போலவே, இவர்களின் இருதயங்களும் சுத்தமாக்கப் பட்டிருந்தது. அவர்களின் இருதயங்களானது, விருத்தசேதனம் மற்றும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுதல் ஆகிய வற்றால் அல்ல மாறாக, “விசுவாசத்தினாலேயே” சுத்தமாக்கப் பட்டிருந்தன. பேதுரு கொர்நேலியுவினிடத்தில், ‘‘தேவன் பட்சபாதமுள்ளவரல்ல” என்று கூறியிருந்தார் (10:34); இந்தக் குழுவினரிடத்தில் அவர், தேவன், ‘‘வித்தியாசமிராதபடி

செய்தார்'' என்று கூறினார். பெந்தெகொஸ்தே நாளன்று யூதர்கள் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற வேண்டியிருந்தது போலவே (2:37, 38), கொர்நேலியுவும் அவர் வீட்டாரும் செய்ய வேண்டியதாயிருந்தது (10:43, 48).

(3) யூதமார்க்கத்தார், புறஜாதியாரை விருத்தசேதனத்தினால் கட்டுப்படுத்த முயற்சி செய்தபோது, அவர்கள் தேவனைச் "சோதிக்கிறவர்களாய்" இருந்தார்கள் (வ. 10ஆ). பிரமாணத்தைக் கட்டுபவர்கள், தாங்கள் பவுல் மற்றும் பர்னபாவுக்கு அறைகூவல் விடுத்ததாக எண்ணினார்கள், ஆனால் உண்மையில் அவர்கள் தேவனுடைய நியாயத் தீர்ப்பைக் கேள்வி கேட்டு, அவருடைய பொறுமையைச் சோதித்தார்கள்! (அப். நட. 1 பாகத்தில் அப். 5:9க்கான குறிப்புகளை பார்க்கவும்.)

(4) புறஜாதியாரைப் பிரமாணத்திற்குக் கட்டுப்படுத்துவதினால், அவர்கள், ''சீஷர்களின் கழுத்தில் நுகத்தடியைச் சுமத்தினார்கள்'' (ஒரு காளை மாட்டின் கழுத்தில் நுகம் வைப்பது என்பதன் நோக்கம் நன்மையானதாயிருந்தது: அது இழுக்க வேண்டிய பாரத்தை அந்நுகம் சமானமானதாய் ஆக்கும். ஆயினும், பிரமாணத்தின் "நுகம்" மிகவும் கனமானதாயிருந்ததென்றும், அது யூதர்களின் சுமையைக் கூட்டியது என்றும் பேதுரு மறைமுகமாகக் குறிப்பிட்டார். இயேசுவும் கூட தமது போதனையை ஒரு "நுகம்" [மத். 11:30] என்றே குறிப்பிட்டார், ஆனால் அவரது நுகம் இலகுவானது என்று சொன்னார். ஆகையால் அது தனது நோக்கத்தை அதாவது சுமையை இலகுவாக்குவதை நிறைவேற்றக் கூடியதாயிருந்தது.) (வ. 10ஆ), இது யூதர்களினாலேயே சுமக்க முடியாததாக இருந்தது. நேர்மையுள்ள எந்த ஒரு யூதரும், தாம் பிரமாணத்தை எவ்வளவு அதிகமாய் நேசித்தாரோ (சங். 119:97) அவ்வளவு அதிகமாய் அதைக் கைக்கொள்ள முடியாமல் போயிற்று என்பதை ஒத்துக்கொள்ள வேண்டியதாயிற்று.[7] நாளுக்கு நாள் அவரது ஆத்துமாவின் குற்றவுணர்வானது அதிகமாகி, கடைசியில் அது உடைந்து சிதறத் தயாராயிருந்தது. பேதுரு கேட்டதின் சாரம், ''ஆத்துமாவை நசுக்கும் இப்பாரத்தை அடுத்தவர்கள் மேல் நீங்கள் சுமத்த விரும்புவது ஏன்?" என்பதேயாகும்.

(5) பேதுருவின் கடைசி வார்த்தைகளே அவரது மாபெரும்

பலமாயிருந்தன: "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை யினாலே அவர்கள் இரட்சிக்கப்படுகிறது எப்படியோ, அப்படியே நாமும் இரட்சிக்கப்படுவோமென்று நம்பியிருக் கிறோமே'' (வ. 11). ''கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையினாலே நாம் இரட்சிக்கப்படுகிறோம்'' என்ற வார்த்தைகளை அடிக்கோடிட்டுக் கொள்ளவும். நாம் கிருபை யினாலே இரட்சிக்கப்படுகின்றோம் - இது கர்த்தருடைய விலைமதிப்பற்ற ஈவு ஆகும் - நாம் இரட்சிக்கப்படும் வழி இது ஒன்றே ஆகும்! மோசேயின் பிரமாணத்தை யூதர்களால் முழுமையாகக் கைக்கொள்ள முடியவில்லை; நீங்களும் நானும் அதன் எந்தக் கட்டளையையும் முழுமையாகக் கைக் கொள்ள முடியாது (ரோமர் 3:23). நாம் கிருபையினால் இரட்சிக்கப்படாவிட்டால், இரட்சிப்படையவே முடியாது. யூதர்களும், புறஜாதியாரும் கிருபையினால் இரட்சிக்கப் பட்டார்கள் என்பதை வலியுறுத்துவதற்குப் பேதுரு கையாண்ட வித்தியாசமான வழிமுறையைக் கவனியுங்கள். "நம்மைப் போலவே அவர்களும் கிருபையினால் இரட்சிக்கப் பட்டார்கள்'' என்று அவர் கூறியிருக்கலாம் என்றே நாம் எதிர்பார்ப்போம். ஆனால் அவரோ, "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையினால் *அவர்கள்* இரட்சிக்கப்படுகிறது எப்படியோ, அப்படியே *நாமும்* இரட்சிக்கப்படுவோம்" என்று கூறினார். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், "தேவன் புறஜாதியாருக்கு, பிரமாணத்தைக் கைக்கொள்ளுவதினால் அல்ல, கிருபையினாலேயே இரட்சிப்பை கட்டளையிட்டுள் ளார்; யூதர்களாகிய நாம் இரட்சிப்படைய வேண்டும் என்றால், நாமும் கூட கட்டளைகளைக் கைக்கொள்வதினால் அல்ல, கிருபையினாலேயே இரட்சிப்படைய முடியும் என்பதைக் கற்றுக் கொள்ள வேண்டும்!" என்று அவர் கூறினார்.

பேதுரு பேசிய பிறகு, பவுலும் பர்னபாவும், தேவன் தங்களின் ஊழியத்தை எவ்வளவாய் ஆசீர்வதித்திருந்தார் என்பதைக் கூறினார்கள். கடைசியாக யாக்கோபு - கர்த்தரு டைய அரை சகோதரரான யாக்கோபு - பேசினார்; இவர் எருசலேம் சபையின் தூண் என்னப்பட்டார் (கலா. 2:9). அநேக மாக, யூத மதபோதகர்கள் தங்கள் நற்செயலுக்குப் பரிந்து பேசு பவர் யாரேனும் இருக்கக் கூடுமென்றால், அது யாக்கோபுதான் என்று நினைத்திருக்கக் கூடும். ஆனால் மீண்டும் ஒருமுறை

அவர்கள் நம்பிக்கை குலைந்தது. புறஜாதிகள் தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்களின் பாகமாய் இருக்க வேண்டும் மற்றும் புறஜாதிகள் முதலில் யூதராக வேண்டும் என்று தேவன் தீர்க்கதரிசனம் மூலம் கூறியிருந்ததில்லை என்பவைகளை அவர் வேதவசனங்களின் மூலம் காண்பித்தார் (15:13-21). பின்பு யாக்கோபு, "ஆதலால் புறஜாதிகளில் தேவனிடத்தில் திரும்புகிறவர்களைக் கலங்கப் பண்ணலாகாதென்று" (15:19) கூறினார். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், "விருத்தசேதனம் மற்றும் நியாயப்பிரமாணம் ஆகியவற்றினால் கட்டுப்படுத்துவதன் மூலம் நாம் புறஜாதிக் கிறிஸ்தவர்களைக் கலங்கப் பண்ணக் கூடாது" என்று அவர் கூறினார்!

***ஆறுதல் (15:22-31)***

யாக்கோபின் பரிந்துரையானது "அப்போஸ்தலருக்கும் மூப்பர்களுக்கும் சபையாரெல்லாருக்கும் நலமாகக் கண்டது" (வ. 22), அவர்கள் அந்தியோகியாவில் இருந்த சபைக்கும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் கடிதம் ஒன்றை எழுதினார்கள். எருசலேமிலிருந்து சென்று அந்தியோகியா சபையாரைக் கலக்கியவர்கள் எருசலேம் சபையாரின் பிரதிநிதிகள் அல்ல என்று அக்கடிதம் கூறியது (வ. 24). புறஜாதிகள் விருத்தசேதனம் மற்றும் மோசேயின் பிரமாணத்தைக் கடைப்பிடித்தல் ஆகியவற்றைச் செய்யும்படி தேவன் கேட்பதில்லை என்பதையும் அக்கடிதம் தெளிவாக்கியது (வ. 28, 29). அந்தியோகியாவில் அந்தக் கடிதம் வாசிக்கப்பட்டபோது புறஜாதி கிறிஸ்தவர்கள், "அதனாலுண்டாகிய ஆறுதலுக்காகச் சந்தோஷப்பட்டார்கள்" (வ. 31). கதவை அறைந்து மூடிய யூதர்கள் தோல்வியடைந்தார்கள்; புறஜாதியாருக்கான தேவனுடைய விசுவாசக் கதவு திறந்தே இருந்தது.

## இன்றைய நாட்களில் கதவை அறைந்து மூடுபவர்கள்

எருசலேமில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டமானது பிரச்சனையை எக்காலத்திற்குமாகத் தீர்த்து வைக்க

வில்லை. விரைவிலேயே, கதவை அறைந்து மூடிய அவர்கள் (அல்லது அவர்களின் ஆவிக்குரிய வாரிசுகள்) தொலைவிலும், பரவலிலும் பயணம் செய்து, புறஜாதிகளிடத்தில் விருத்த சேதனம் மற்றும் நியாயப்பிரமாணத்தைக் கைக் கொள்ளுதல் ஆகியவற்றைப் போதிக்க ஆரம்பித்தார்கள். பவுலின் தொடக்க கால நிருபங்கள் பலவற்றில் - விசேஷமாக ரோமர் மற்றும் கலாத்தியர் நிருபங்களில் - இப்பிரச்சனையானது விரிவாக விவாதிக்கப்படுகின்றது. துரதிர்ஷ்டவசமாக, கதவை அறைந்து மூடுபவர்களின் ஆவிக்குரிய சந்ததியார் இன்றைய நாளில் அதிகமாய்ப் பலுகி, தொடர்ந்து நம்முடன் இருக்கின்றார்கள்.

## பிரமாணத்தைக் கடைப்பிடித்துக் கதவை அறைந்து மூடுபவர்கள்

எடுத்துக்காட்டாக, பழைய ஏற்பாட்டின் கட்டளைகள் அனைத்தையும் அல்லது பகுதியை இன்று கிறிஸ்தவர்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்று போதிக்கின்றவர்கள் இன்றும் இருக்கின்றார்கள். மார்க்கக் குழுவொன்று தனது பரிசுத்த இடங்கள், விசேஷித்த ஆசாரியத்துவம், தூபங்காட்டுதல், மற்றும் மெழுகு வர்த்திகள் எரித்தல் ஆகியவற்றிற்கு அதிகார முடைமையைக் காணப் பழைய ஏற்பாட்டிற்குச் செல்லு கின்றது. இன்னொரு குழுவானது ஏழாம் நாள்தான் கிறிஸ்த வர்களின் விசேஷித்த ஆராதனை நாள், வாரத்தின் முதல் நாள் அல்ல என்று காட்டுவதற்கு யாத்திராகமம் 20ம் அதிகாரத் திற்குச் செல்லுகின்றது. அநேக மார்க்க நிறுவனங்கள் இசைக் கருவிகள் மற்றும் பாடகர் குழுவைப் பயன்படுத்துதல் உள்ளிட்ட தங்களின் சடங்காச்சார ஆராதனையைப் பழைய ஏற்பாட்டு முறைமைகளின் அடிப்படையிலேயே அமைத்துக் கொண்டுள்ளன. சிலர், பல மனைவிகளைக் கொண்டிருக்கும் தங்கள் நடைமுறையைக் கூட பழைய பிரமாணத்தைக் கொண்டு நியாயப்படுத்துகின்றார்கள்.

அப். 15ல் யூதமத போதகர்களும் - மற்றும் இன்றைய நாளில் பிரமாணத்தைக் கடைப்பிடிக்கும்படி கூறுபவர்களும் - இவ்வித அடிப்படைத் தவறை எப்படிச் செய்ய முடியும் என்பதைப் புரிந்து கொள்வதும் கூட நம்மில் சிலருக்குக் கடினமாயிருக்கின்றது. நம்மில் சிலர், பழைய உடன்படிக்கை சிலுவையில் அறையப்பட்டது (கொலோ. 2:14, 16) மற்றும்

*இயேசு மரித்தபோது அவருடைய புதிய உடன்படிக்கை அமுலுக்கு வந்தது (எபி. 9:16, 17) என்பது பற்றிய பின்வரும் எளிய வரை படத்தை நமது சிறு வயது முதற் கொண்டு பார்த்திருக்கலாம். இதில் சுலபமாய்ப் புரிந்துகொள்ளக்கூடியது என்ன?*




*அப். 15ன் யூதமத போதகர்களைப் பொறுத்தமட்டில், அச்சமயத்தில் கலாத்தியர் மற்றும் ரோமர் ஆகிய நிருபங்கள் எழுதப்பட்டிருக்கவில்லை என்பதை நாம் நினைவுகூர வேண்டும் - நியாயப்பிரமாணத்தின் நிலை குறித்துப் புரிந்து கொள்ள வேண்டிய மாறுதலின் காலத்தின் வழியே யூத கிறிஸ்தவர்கள் கடந்து கொண்டிருந்தார்கள். மறுபுறத்தில், இன்றைய நாட்களில் பிரமாணத்தைக் கொண்டு கட்டுப் படுத்துபவர்கள் பவுலின் நிருபங்களைக் கவனமாய்ப் படிக்க வேண்டியது அவசியமாகும். கலாத்தியருக்குப் பவுல் எழுதிய நிருபத்தில், நியாயப்பிரமாணமானது தனது நோக்கத்தை நிறைவேற்றிவிட்டது என்றும், நாம் அதன் அதிகாரத்திற்குக் கீழானவர்கள் அல்ல என்றும் பவுல் வலியுறுத்தினார் (கலா. 3:16, 19, 24, 25). ரோமருக்கு எழுதின நிருபத்தில் பவுல், "எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை" (ரோமர் 3:20) என்று வலியுறுத்தினார். எபேசியருக்கு அவர் எழுதின நிருபத்தில், "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்" (எபே. 2:8) என்று எளிமையாகவும் கூறினார்.*

### பாரம்பரியக் கட்டுப்பாட்டினால் கதவை அறைந்து மூடுபவர்கள்

*நமது ஆவிக்குரிய சுயாதீனத்தின்மீது கதவை அறைந்து மூடுபவர்கள், மோசேயின் நியாயப்பிரமாணத்தினால் கட்டுப் படுத்த முயற்சி செய்யும் மனிதர்கள் மட்டும் அல்ல. அப். 15ல் பரிசேயர்கள் பற்றிக் குறிப்பிட்ட விஷயமானது வேதவசனங் களைப் போலவே மனிதனால் ஏற்படுத்தப்பட்ட பாரம் பரியமும் நம்மைக் கட்டுப்படுத்தும் என்று கருதிய பரிசேயரை நமக்கு நினைவூட்டுகின்றது. பரிசேயர்களுடைய போதனை யைப் பற்றிப் பேசும்போது இயேசு, "சுமப்பதற்கரிய பாரமான சுமைகளைக் கட்டி மனுஷர் தோள்களின்மேல் சுமத்து கிறார்கள் ..." (மத். 23:4) என்று கூறினார்.*

*பாரம்பரியங்கள் யாவும் தங்களிலேயே மோசமானவை களாயிருக்க வேண்டிய அவசியம் இல்லை. நம்மில் அநேகர் நமது குடும்பங்களின் அடிப்படை இயல்பைக் கொண்டுள்ள குடும்பப் பாரம்பரியங்களைப் பெற்றுள்ளோம். கர்த்தருடைய சபையில், வேதவசனத்தை மீறிச் செல்லாத வகையில் பாரம்பரியமான வழிமுறையில் ஊழியங்களும், ஆராதனை முறைமையும் மேற்கொள்ளப்படலாம். ஆயினும் நாம் நமது பாரம்பரியங்களை வேதவசனங்களுடன் இணையாக்கி, நமது பாரம்பரியங்களை மற்றவர்கள்மீது திணிக்க முற்படும்போது, மத்தேயு 15:9ல் இயேசுவின் வசனங்களினால் நாம் கண்டனம் செய்யப்படுகின்றோம்: ''மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்.''[8]*

*இன்றைய மார்க்க உலகமானது சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவையும் கட்டுப்படுத்துகின்ற, மனிதர்களின் உபதேச சட்டங்களினால் நிறைந்துள்ளது. சிலர் இப்படி இருப்பதையே விரும்புகின்றார்கள். அவர்கள், தாங்கள் என்ன செய்ய வேண்டும், என்ன நினைக்க வேண்டும் என்பதை மற்றவர்கள் கூறும்படி விடுவதே பாதுகாப்பானது என்று காணுகின்றார்கள், "அடிமைத்தனத்தில் ஒரு வகையான பாதுகாப்பு உண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறது."[9] ஆயினும் நம்மில் ஒருவரும் கிறிஸ்து வுக்குள் நமக்கு உண்டான சுயாதீனத்திற்குப் பதிலாக மனித உபதேசங்கள் என்ற விலங்கை மாட்டிக் கொள்ளக் கூடாது*

*என்றே நான் ஜெபிக்கின்றேன். பவுல், "ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்" (கலா. 5:1) என்று கூறினார்.*

*சுவிசேஷம் புதிதாய் அறிவிக்கப்படும் பகுதிகளுக்கு விசேஷித்த எச்சரிக்கை வார்த்தையானது தரவேண்டியது அவசியமாகும் (20:28-31 ஐக் காணவும்). ஓரிடத்தில் கர்த்தருடைய சபையானது நிலைநாட்டப்பட்டு, வளர்ந்து வருகையில், விரைவிலேயே அங்கு, "கிறிஸ்து இயேசுவுக்குள் [புதிய கிறிஸ்தவர்களுக்கு] உண்டான சுயாதீனத்தை உளவு பார்த்து அடிமைத்தனத்திற்குள்ளாக்கும்" (கலா. 2:4) மனிதர்கள் வருவார்கள் என்பதை ஊழியக் களத்தில் எனக்குள்ள அனுபவமானது போதிக்கின்றது. அப். 15ல் அந்தியோகியாவிற்கு வந்த மனிதர்கள் எருசலேமிலிருந்து வந்தபடியினால் நம்பிக்கையைப் பெற்றனர். இன்றைய நாட்களில், அமெரிக்காவிலிருந்து வரும் எந்த ஒரு பிரசங்கியாரும் ஆரோக்கியமான உபதேசமுடையவர்களாயிருப்பார்கள் (2 தீமோ. 4:3) என்று சிலர் நினைக்கின்றார்கள், ஆனால் அது உண்மையல்ல என்பது துரதிர்ஷ்டவசமானதாகும். தேவனிடத்திலிருந்து தொடங்கியதாயிராமல், தங்களின் வளமான கற்பனையில் தோன்றிய கட்டளைகள் மற்றும் ஒழுங்கு முறைகளினால் சபையைக் கட்டுப்படுத்த முயற்சி செய்யும் எவரொருவர் பற்றியும் எச்சரிக்கையாயிருங்கள்.[10] வேதாகமத்தின் அடிப்படை உபதேசங்களை மீறாத வகையில், கிறிஸ்தவ அனுபவத்தின் பல பகுதிகளில் நமது சிறந்த முடிவுகளைப்[11] பயன்படுத்த நாம் சுயாதீனம் பெற்றிருக்கின்றோம். சுயாதீனத்தின் இக்கதவை அறைந்து மூடுவதற்கு எவரையும் நீங்கள் அனுமதித்துவிட வேண்டாம்!*

### செய்கைகளின்பால் அமைவு பெற்று, கதவை அறைந்து மூடுபவர்கள்

*கதவை அறைந்து மூடுபவர்களில் இன்னொரு வகைப்பட்டவர்களைப் பற்றிக் குறிப்பிடாமல் நாம் இதை முடிக்க முடியாது: இவர்கள், செய்கைகளினால் இரட்சிப்பைப் பெறலாம் என்று கருதுகின்ற, கதவை அறைந்து மூடுபவர்கள் ஆவார்கள். சில வகையில் இவர்கள் கதவை அறைந்து*

மூடுபவர்கள் எல்லாரிலும் மிக அதிகமான நுட்பமுடைய வர்கள் ஆவார்கள்; ஏற்கனவே குறிப்பிடப்பட்டவர்களைப் போல் இல்லாமல், (1) இவர், நாம் பழைய ஏற்பாட்டின் கீழ் அல்ல புதிய ஏற்பாட்டின் கீழ்தான் இருக்கின்றோம் என்று வலியுறுத்துகின்றார்; (2) இவர் மனிதர்களின் பாரம்பரியங் களைக் கண்டனம் பண்ணுகின்றார்; (3) இவர் தேவனுடைய கட்டளைகளைப் புதிய ஏற்பாட்டில் கண்டுள்ளபடியே, எதையும் கூட்டாமல் குறைக்காமல் போதிக்கின்றார். இவை எல்லாவற்றையுமே நாம் பாராட்டுகின்றோம் - ஆகவே, அபாயம் எங்கு இருக்கின்றது? இவ்வகையான கதவை அறைந்து மூடுபவர், தேவனுடைய கிருபைக்குப் பதிலாக மனிதர்களுடைய கீழ்ப்படிதலை வலியுறுத்துகின்றார். இவர் பழைய ஏற்பாட்டின் கட்டளைகளுக்குப் பதிலாகப் புதிய ஏற்பாட்டின் கட்டளைகளைக் காட்டி, புதிய ஏற்பாட்டில் தேவன் கட்டளையிட்டுள்ள யாவற்றையும் மிகச் சரியாகக் கடைப்பிடிப்பதன் மூலமாகவே நாம் இரட்சிக்கப்பட முடியும் என்று அறிவிக்கின்றார்.

அநேக காரணங்களினால் இந்த நிலைப்பாடு தவறானதா கின்றது. முதலாவதும் முக்கியமானதும், வேதாகமம் இப்படிப் போதிக்காதபடியினால் இது தவறானதாகும். அப். 15ல் பேதுரு தமது பிரசங்கத்தில், ‘‘கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையினாலே இரட்சிக்கப்படுகிறோம்’’ (வ. 11) என்று வலியுறுத்தினார். இதில், புறஜாதியார் மோசேயின் பிரமாணத் தைக் கைக்கொள்வதினால் இரட்சிக்கப்பட முடியாது என்ற கருத்து மறைமுகமாய் உணர்த்தப்படுகின்றது. மேலும், பொது வாகவே பிரமாணத்தைக் கடைப்பிடிப்பதினால் மனிதர்கள் இரட்சிப்படைய முடியாது என்ற கருத்தும் இதில் மறை முகமாய் இருக்கின்றது. இந்த சத்தியத்தைப் பவுல், எபேசியர் 2:8, 9ல் வலியுறுத்தினார்: “கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டான தல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல.” இது தேவனுக்குக் கீழ்ப்படிகின்ற அவசியத்தை தவிர்ப் பதில்லை (மத். 7:21-23; எபி. 5:8, 9), ஆனால் இது நம்மில் எவரொருவரும் நமது சொந்த இரட்சிப்பை நாமே சம்பா தித்துக் கொள்ளும் சாத்தியக் கூற்றைத் தவிர்த்து விடுகின்றது.

நாம் எவ்வளவு நற்செயல்கள் செய்தாலும், தேவனை நமது கடன்காரராக்கிவிட நம்மால் முடியாது (லூக். 17:10). “இரட்சிப்பு என்பது ஈடு செய்யப்படும் செயலாகவே உள்ளது, இது நமக்கு நாமே முயற்சி செய்து அடையும் விஷயம் அல்ல.”

கிரியைகளினால் இரட்சிப்பு என்ற நிலை தவறானது என்று பேதுரு கூறினார், ஏனென்றால் இந்நிலையானது, “நம்முடைய பிதாக்களாலும் நம்மாலும் சுமக்கக் கூடாதிருந்த நுகத்தடியைச் சீஷர் கழுத்தின்மேல் சுமத்துவதாய்” (அப். 15:10) இருந்தது. நேர்மையான இஸ்ரவேலர் ஒவ்வொருவரும் மோசேயின் பிரமாணத்தை முற்றுமாகக் கைக்கொள்வது சாத்தியமில்லை என்று ஒத்துக் கொண்டது போலவே, நேர்மையான ஒவ்வொரு கிறிஸ்தவரும் கிறிஸ்துவின் கட்டளைகளை முற்றுமாகக் கைக் கொள்வது சாத்தியமானதில்லை என்பதை ஒப்புக் கொண்டே யாக வேண்டும்.[12] நாம் நம்மால் முடிந்த அளவுக்குச் சிறந்த செயல்களைச் செய்தாலும் கூட தேவமகிமையற்றவர்களாகக் காணப்படுகின்றோம் (ரோமர் 3:23; 7:15). தேவனுடைய கட்ட ளைகள் ஒவ்வொன்றையும் நாம் முற்றிலுமாகக் கடைப் பிடிக்காத வரையில் தேவன் நம்மை இரட்சிக்க மாட்டார் என்று நம்புவதென்பது, நமது இருதயத்தில் சலிப்பை ஏற்படுத் தும் (ஆர்வத்தைக் குறைத்து விடும்) மற்றும் நாம் அழியப் போகின்றவர்கள் என்று ஆக்கிவிடும். இந்த உபதேசத்தைப் பற்றிக்கொள்கின்றவர் எப்பொழுதுமே குற்றவுணர்வின் பாரத்தினால் சுமையேற்றப்பட்டவராயிருக்க வேண்டும். “நிர்ப்பந்தமான மனுஷன் நான்” என்று அவர் அலறுகின்றார்! “யார் என்னை விடுதலையாக்குவார்?” (ரோமர் 7:24). பேதுரு வின் உரையில், தேவன் நமது வாழ்க்கையில் முழு நிறைவை யல்ல ஆனால் நமது இருதயங்களில் விசுவாசத்தையே காண் கின்றார் என்ற மறைமுகக் கருத்து உள்ளதென்பதை உணர்வது எவ்வளவு விடுதலையளிப்பதாய் இருக்கின்றது (அப். 15:8, 9)!

எல்லாவற்றிற்கும் மேலாக, தேவனுடைய சித்தத்தைச் செய்ய விருப்பமுள்ள வகையில் அமைந்த விசுவாசத்தையே தேவன் நம்மிடத்தில் விரும்புகின்றார் (கலா. 5:6; ரோமர் 1:7; யாக். 2:26). “என்னை நானே இரட்சித்துக்கொள்ள முடியாது; நான் தேவனுடைய கிருபையினாலே இரட்சிக்கப்படுகின் றேன்; ஆகவே நான் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டிய அவசியம் இல்லை” என்று வாதம் செய்யும் ஒருவர் இரட்சிப்புக்

கேற்ற விசுவாசம் இல்லாதவராய் இருக்கின்றார்; அவருடைய இருதயம் தேவனுக்கு முன்பாகச் செம்மையானதாய் இருப்பதில்லை. கிருபையினாலே இரட்சிப்பு என்பது கீழ்ப்படிதலின் அவசியத்தை எடுத்துப் போடுவதில்லை; ஆனால் நமக்குச் சாத்தியமற்ற - பாவமே இல்லாத வாழ்வு என்ற - நிலையை நம்மிடத்தில் எதிர்பார்க்கும் பயம் நிறைந்த அடிமைத்தனத்திலிருந்து நம்மை விடுதலையாக்குகின்றது.

இரட்சிப்படைய வேண்டுமென்றால் நான் முழு நிறைவான வாழ்க்கை வாழ வேண்டும் என்று என்னிடத்தில் அறிவிக்கும் எவரும் இரட்சிப்பின் கதவை என் முகத்திற்கெதிரே அறைந்து மூடுபவராக இருக்கின்றார்; ஏனென்றால் என்னால் முடிந்த அளவு சிறந்த முறையில் செயல்பட்டாலும், நான் ஒரு பாவமுள்ள மனிதனாகவே இருக்கின்றேன். கிரியையினாலே இரட்சிப்பு என்று கூறும் கதவை அறைந்து மூடுபவர்களிடத்திலிருந்து தேவன் நம்மை மீட்டுக் கொண்டதற்காக நாம் அவருக்கு நன்றி செலுத்துவோம்!

## முடிவுரை

நமது அடுத்த இரண்டு பாடங்களில், சகோதரர்களுடன் நமக்கு கருத்து வேறுபாடு ஏற்படும்போது, சிலவேளைகளில் விவாதம் செய்ய வேண்டும், சிலவேளைகளில் சம்மதித்துச் செல்ல வேண்டும் என்பதை வலியுறுத்தப் போகின்றோம். கிறிஸ்துவுக்குள் நமக்குள்ள சுயாதீனத்தை எடுத்துப்போட யாரேனும் முயற்சி செய்தால் அது நாம் சத்தியத்திற்காகப் போராட வேண்டிய ஒரு சந்தர்ப்பம் ஆகும். தேவன் புறஜாதியாருக்குத் திறந்திருந்த விசுவாசத்தின் கதவை, அந்தியோகியாவுக்கு வந்த கள்ள போதகர்கள் அறைந்து மூட முயற்சி செய்தபோது, பவுலும் பர்னபாவும் “அவர்களுடன் வாக்குவாதமும் தர்க்கமும் செய்தார்கள்'' (15:2). பவுல், ‘‘சுவிசேஷத்தின் சத்தியம் உங்களிடத்திலே நிலைத்திருக்கும்படி, நாங்கள் ஒரு நாழிகையாகிலும் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து இணங்கவில்லை” (கலா. 2:5) என்று கூறினார்.

1863ம் ஆண்டு ஜனவரி 1, மதிய வேளையில், ஆபிரகாம் லிங்கனுடைய மாநிலச் செயலாளரான வில்லியம் ஸீவர்ட் அவர்கள், அடிமைகளின் விடுதலைப் பிரகடனத்தை

லிங்கனிடத்தில் கையொப்பம் பெறுவதற்காகக் கொண்டு வந்தார். பேனாவை இருமுறை கையில் எடுத்த லிங்கன் மறுபடியும் அதை மேசையின் மேல் வைத்தார். ஸீவர்ட்டிடம் அவர், "இன்று காலை 9.00 மணியில் இருந்து நான் பலரிடம் கைகுலுக்கிக் கொண்டிருந்ததால் எனது வலது கையானது ஏறக்குறையச் செயலற்றதுபோலாகிவிட்டது. எனது பெயர் வரலாற்றில் எழுதப்படுமானால் அது இந்தப் பிரகடனத்தி னாலேயே செய்யப்பட்டதாயிருக்கும். நான் இப்போது கையொப்பமிட்டால் எனது கை நடுங்கும், பின்னால் இந்தத் தாளைப் பார்ப்பவர்கள், 'லிங்கன் தயக்கமாயிருந்தார்; அவருடைய இருதயமானது இதில் இல்லை' என்று கூறுவார் கள். நான் திடமாய்க் கையெழுத்துப் போட முடியாத வரையிலும் இதில் கையெழுத்திட மாட்டேன்'' என்று கூறினார். கடைசியில் அவர் திடமடைந்தபோது, பேனாவை எடுத்து, மெதுவாகவும் அழுத்தமாகவும் கையெழுத்திட்ட அந்தத் தாளானது இந்த நாட்டில் உள்ள (அமெரிக்காவில் உள்ள) எல்லா மக்களும் என்றென்றைக்கும் சுயாதீனமானவர் கள் என்று கூறுகின்றது.[13]

அப். 15ன் கூட்டத்தை நாம் பரிசோதனை செய்யும்போது, பேதுரு, பவுல், பர்னபா மற்றும் யாக்கோபு ஆகியோர் கிறிஸ்துவுக்குள் எல்லா மனிதர்களும் சுயாதீனமானவர்களே என்று தைரியமாக அறிவித்தார்கள். மனிதர்கள் நம்மைப் பரிசோதனை செய்கையில், நாமும் கூட அதே தைரியத்துடன் ஆவிக்குரிய சுயாதீனத்தைப் பிரசங்கம் செய்வதை அவர்கள் பார்க்க வேண்டும் என்று ஜெபிக்கின்றேன்![14]

## பிரசங்கக் குறிப்புகள்

வார்ரென் வயர்ஸ்ப் அவர்கள் அப். 15:1-35 ஐ மூன்று "D" களுடன் புறக்குறிப்பிட்டார்; (1) The Dispute - விவாதம் (வ. 1-5), (2) The Defense - தன்னிலை வாதம் (வ. 6-18) மற்றும் (3) The Decision - முடிவு (வ. 19-35). இரண்டாவது பிரிவின் கீழ் அவர், பேதுரு கடந்த காலத்தை மறுபடியும் கண்ணோக்கினார் (வ. 6-11), பவுலும் பர்னபாவும் நிகழ்காலத்தின் அறிக்கையைத் தந்தார்கள் (வ. 12) மற்றும் யாக்கோபு இவை எல்லாவற்றையும்

எதிர்காலத்துடன் தொடர்புபடுத்தினார் (வ. 13-18) என்று குறிப்பிட்டார்.

தீத்துவைப் பற்றி உற்சாகமான ஒரு துணைப் பிரசங்கம், “லூக்கா குறிப்பிட மறந்த ஒரு மனிதர்” என்ற தலைப்பில் பிரசங்கிக்கப்படலாம். தீத்துவின் ஊழியம் பற்றிய சில விபரங்களை அடிக்குறிப்புகளில் காணவும். பவுலின் நிருபத்தில் அவரைப்பற்றியுள்ள விபரங்களையும் நீங்கள் பயன்படுத்த விரும்பலாம்.

குறிப்புகள்

[1]அப். நட. புத்தகம் 15 ஆம் அதிகாரத்தில் பவுல் எருசலேமுக்கு மூன்றாம் முறை வந்ததாகக் காணப்படுகின்றது. ஆனால் கலாத்தியர் 2ல் உள்ளது இரண்டாம் பயணமாகத் தோன்றுகிறதென்பது ஒரு இடர்பாடு ஆகும். ஆயினும், கலாத்தியர் 2ல் காணப்படும் பயணம் தமது இரண்டாவது பயணம் என்று பவுல் கூறவில்லை. அவர், “பதினாலு வருஷம் சென்ற பின்பு [கலாத்தியர் 1ல் உள்ள பயணத்திற்குப் பிறகு, அதாவது அவர் மனம் மாறி ஒரு சில வருடங்களுக்கு பின் இருந்த காலத்திலிருந்து 14 வருஷங்கள் ஆன பிறகு] நான் ... *மறுபடியும்* எருசலேமுக்குப் போனேன்.” இங்குள்ள “மறுபடியும்” என்ற வார்த்தையானது எருசலேமுக்குச் சென்ற இன்னொரு சிறு பயணத்தின் சாத்தியக்கூற்றினைத் தவிர்ப்பதில்லை (12:25ல் குறிப்பிடப்பட்டது), அவ்வேளையில் அவர் அப்போஸ்தலர்களைச் சந்திக்கச் சமயம் வாய்க்காதிருந்தார் (அவர்கள் ஒளித்து கொண்டோ அல்லது சிறையிலோ இருந்திருக்கலாம்). [2]கொர்நேலியு தேவனுக்குப் பயந்தவராயிருந்தார் மற்றும் அந்தியோகியாவில் ஊழியம் தொடங்கியது முதலே அங்கிருந்த புறஜாதியார், யூதர்களின் பலத்த ஆதிக்கத்தின் கீழ் இருந்தார்கள் (11:19-21; 13:1); ஆனால் பவுலினால் மனமாற்றமடைந்த புறஜாதியாரில் அநேகர் சிறிதளவே யூத ஆதிக்கம் பெற்றவர்களாகவோ அல்லது யூத ஆதிக்கமே அற்றவர்களாகவோ இருந்தார்கள். இது சில யூத கிறிஸ்தவர்களைப் பயமுறுத்தியது. (புறஜாதியாரின் சபைகளில் இருந்த - கொரிந்துவில் இருந்தது போல - தேவபக்தியின்மையானது யூத கிறிஸ்தவர்கள் ஏன் பயந்தார்கள் என்பதை விளக்கப்படுத்தக் கூடும்.) [3]அநேக விளக்கவுரையாளர்கள் எருசலேமில் இருந்த சபையை “தாய் சபை” என்று கூற விரும்புகின்றார்கள். மற்ற சபைகளைக் கண்காணிக்கும்படியாக தேவன் ஒரு சபையை நிலைநாட்டினார் என்ற கருத்து மனதில் படிந்து விடாதபடி எச்சரிக்கையாயிருக்க வேண்டும். சபைக்குத் தேவனுடைய வெளிப்படுத்துதல் என்பதற்கு ஆதார மூலமாய் இருப்பதற்காகப் *எல்லா* உள்ளூர் சபைகளுடனும் அப்போஸ்தலர்கள் தனிச் சிறப்பான உறவு வைத்திருந்தார்கள் - இந்த சிலாக்கியமானது மற்றவர்களுக்கு தொடர்ந்து தரப்படவில்லை. ஆனால் எருசலேமில் இருந்த சபையானது, மற்ற உள்ளூர் சபைகளைக் கண்காணிக்கவில்லை. ஒவ்வொரு உள்ளூர் சபையும் சுய ஆளுகை அமைப்பு உடையதாய் இருந்தது (சுய ஆட்சியுடைமை). (எருசலேமே நமது “தாய்” என்பதைப் பொறுத்தமட்டில், கலாத்தியர் 4:26 ஐக் கவனியுங்கள்: “மேலான எருசலேமோ [அதாவது பரலோகம்; பூமியில் உள்ள எருசலேம் அல்ல] சுயாதீனமுள்ளவள், அவளே நம்மெல்லாருக்கும்

*தாயானவள்.")* [4]*புறஜாதியாரைச் சேர்ந்த ஆண்கள் யூதமார்க்கத்தமைந்தவர்களாக வேண்டுமென்றால், அவர்கள் விருத்தசேதனம் செய்து கொள்ள வேண்டியது மிக அவசியமானதாயிருந்தது ("அப். நட. 1" இதழின் சொற்பொருள் அகராதியில் "Proselyte" - யூதமார்க்கத்தமைந்தவர் என்பதின் கீழ் காணவும்).* [5]*வசனம் 5ல் உள்ள "அவசியம்" (dei என்பதிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது) என்ற வார்த்தையானது, அவர்கள் முன் வைத்த செயல்பாடானது விருப்பத் தேர்வு என்று அவர்கள் கருதவில்லை என்பதை வலியுறுத்துகின்றது (அப். 1:21; ரோமர் 13:5; எபி. 8:3 ஆகியவற்றைக் காணவும்).* [6]*ஏவப்பட்டிராத பாரம்பரியத்தின்படி, அந்தியோகியா லூக்காவின் சொந்த ஊரானதால், தீத்து, லூக்காவின் சகோதரனாயிருக்கலாம் என்று சிலர் யூகித்துள்ளார்கள். இது உண்மையென்றால், பின்வரும் உண்மைகளுக்கு அப்பாலும், லூக்கா தீத்துவின் பெயரை ஒருபோதும் குறிப்பிடாதது ஏன் என்பதை இது விளக்கக் கூடும்: (1) அநேகமாக பவுல் தீத்துவை மனம் மாற்றி அவருடன் நெருக்கமாயிருக்கக் கூடும் (தீத்து 1:1), (2) மூன்றாவது ஊழியப்பயணத்தில் பவுலின் உடன் ஊழியராகத் தீத்து சென்றார் (2 கொரி. 2:13; 7:13, 14; 8:6, 16, 23; 12:18), (3) பவுல் ரோமச் சிறையிருப்பிலிருந்து விடுதலை பண்ணப்பட்ட பிறகு அவருடன் தீத்து ஊழியம் செய்தார் (தீத்து 1:5), மற்றும் (4) பவுல் இரண்டாம் முறை ரோமாபுரியில் சிறையிலடைக்கப்பட்டபோது தீத்து அவருடனிருந்தார் (2 தீமோ. 4:10).* [7]*நியாயப்பிரமாணத்தில் தவறு ஏதும் இல்லை, ஆனால் அவைகளை முற்றிலுமாய்க் கடைப்பிடிக்க மனிதனால்தான் இயலாமல் போயிற்று என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். எனவேதான் நமக்கு பிரமாணத்தின்படியான அமைப்பு வேண்டியிராமல், கிருபையின்படியான அமைப்பு வேண்டியதாயிற்று. நியாயப்பிரமாணத்தை முற்றிலுமாகக் கடைப் பிடித்த ஒரே ஒருவர் இயேசு கிறிஸ்து மட்டுமே ஆவார்.* [8]*பாரம்பரியத்திற்கு எதிரான, இயேசுவின் எச்சரிக்கையானது முக்கியமானதேயாகும், ஆனால் சிலர் இந்தப் போதனையை மிதமிஞ்சிய அளவுக்குக் கருதிக் கொண்டார்கள். "நாம் செயல்களை எப்பொழுதும் செய்கின்ற வழிமுறைகள் யாவும்" "மனித பாரம்பரியப் படியானதே" என்று தாமாகவே அவர்கள் சமப்படுத்தி விடுகின்றார்கள். அநேக நடைமுறைகளைப் பொறுத்தமட்டில் இது உண்மையாயிருக்கலாம், ஆனாலும் எல்லாவற்றிற்கும் இது உண்மையாகி விட முடியாது. கிறிஸ்துவின் சபைகளானவை வேதவசனத்தைப் போதிப்பதையே எப்பொழுதும் வலியுறுத்தியிருக்கின்றன, ஆனால் இது, இச்செயல் ஒரு மனிதப் பாரம்பரியம் என்பதால் விலக்கப்பட வேண்டும் என்று அர்த்தமாகி விடாது. சில செயல்கள் "எப்பொழுதும் ஒரு குறிப்பிட்ட வழிமுறையிலேயே செய்யப்படுவதென்பது" அவைகள் மனிதப் பாரம்பரியத்தின்படியானவைகள் என்பதால் அல்ல, ஆனால் அவைகள் தெய்வீகப் பாரம்பரியத்தின்படியானவை என்பதினால்தான் (2 தெச. 3:6). பொதுவான நடைமுறைகள் எல்லாவற்றையும் "பாரம்பரியம்" என்று அழைத்து ஒன்றாக அவை எல்லாவற்றையும் விலக்க முயற்சி செய்பவர்களைக் குறித்து எச்சரிக்கையா யிருங்கள். ஒவ்வொரு நடைமுறையும் தேவனுடைய வசனத்தின் வெளிச்சத்தில் தனித்தனியே பரிசோதிக்கப்பட்டு அது தெய்வீகப் பாரம்பரியமா அல்லது மனிதப் பாரம்பரியமா என்று முடிவு செய்யப்பட வேண்டும்.* [9]*எண்ணாகமம் 11:5ல் இஸ்ரவேலர்களின் நடக்கையைக் கவனிக்கவும்.* [10]*இதற்கான எடுத்துக் காட்டொன்றை இந்த இதழில் அப். 11:29, 30 க்கான குறிப்புகளைக் காணவும்.*

[11]*எடுத்துக்காட்டாக, நாம் என்ன செய்ய வேண்டும் என்று தேவனால் நமக்குக் கூறப்பட்டிருந்தும், எப்படிச் செய்வதென்று நமக்குக் குறிப்பாகக் கூறப்படாத பட்சத்தில், நாம் சிறந்ததென்று எண்ணுகின்ற எந்த முறையையும் நாம் பயன்படுத்தச் சுயாதீனமுள்ளவர்களா யிருக்கின்றோம்.* [12]*கிறிஸ்து நமக்குக் கட்டளையிட்டுள்ளது சில வழிகளில் பழைய பிரமாணத்தைக் காட்டிலும்*

*கடினமானதாக இருக்கின்றது (மத்தேயு 5ல் "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்ற பகுதிகளைக் காணவும்). [13]இவ்விளக்கமானது ரிக் ஆட்ச்லீ அவர்களால், டெக்ஸாஸ், அபிலைனில் உள்ள தென்மலைகள் கிறிஸ்துவின் சபையில் 1986 ஏப்ரல் 13 அன்று பிரசங்கிக்கப்பட்ட "கிருபையின் இடம்" என்ற பிரசங்கத்திலிருந்து எடுக்கப்பட்டதாகும். [14]இப்பாடம் ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தப்பட்டு, நீங்கள் ஒரு அழைப்பு விடுத்தால், நமது இரட்சிப்பை "அறைந்து மூடும்" பிரதானமான ஒன்று பாவமே என்பதைக் கூற விரும்பலாம். "கிறிஸ்துவுக்குள்" மட்டுமே சுயாதீனம் காணப்படுவதால், அழைப்பிற்கு நீங்கள் கலாத்தியர் 3:26, 27ஐப் பயன்படுத்த விரும்பலாம் - அது நாம் "கிறிஸ்துவுக்குள்ளாவது" எப்படி என்று தேவன் கூறுவதைக் காட்டுகின்றது.*

---

## *மன்னிப்பும், ஏற்றுக் கொள்ளுதலும்*

*"தேவன் நம்மை இரட்சிக்க விரும்புகின்றார், ஆனால் நாம் அவருடைய கிருபையின் கொடையை ஏற்றுக் கொள்ளாது மறுக்க (தள்ளிவிட) க் கூடும். ஆன்ட்ரூ ஜாக்ஸன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தபோது, ஒரு மனிதர் மரணத் தீர்வை யிடப்பட்டார். ஜாக்ஸன் அவரை மன்னிக்கத் தீர்மானித்து உத்தரவிட்டார். தண்டனைக்குக் காத்துக் கொண்டிருந்த அவரிடத்தில் ஜனாதிபதியின் மன்னிப்பு எடுத்துச் செல்லப் பட்டது, ஆனால் அந்த மனிதர் அதை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார். சிறையதிகாரிகள், அதை அவர் ஏற்றுக் கொள்ளும்படி வற்புறுத்தினார்கள். அதை ஏற்றுக் கொள்ள மறுப்பதென்பது ஜனாதிபதியை அவமானப்படுத்துவதாகும் என்று அவர்கள் கூறினார்கள். அப்பொழுதும் அவர் அந்த மன்னிப்பை ஏற்க மறுத்தார். தலைமை வழக்குரைஞர் வந்து அவரை இணங்கப் பண்ண முயற்சி செய்தார், ஆனால் அவர் பிடிவாதமாகவே இருந்தார். தலைமை வழக்குரைஞர் அமெரிக்க நாட்டின் உயர்நீதி மன்றம் சென்று, "மன்னிப்பை அவர் ஏற்றுக் கொள்ளும்படி வற்புறுத்தச் சட்டரீதியான நாம் ஏதேனும் செய்ய முடியுமா?" என்று கேட்டார். அவ்விஷயத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்துப் பிறகு பின்வரும் முடிவை நீதிமன்றத்தார் கையளித்தார்கள்: "மன்னிப்பு என்பது ஏற்றுக்கொள்ளப்படாத வரையிலும் சக்தியற்ற வெறும் காகிதம்தான்."*

*"சிந்தனைக்கு உணவு"*
*ரிக் ஆட்ச்லீயின் பிரசங்கம்*